OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-1 MAY 950
MADRAS

★ 'பக்தி' ★

ACCUTHAL
01341
1040

‘பக்தி’

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

வாணியம்பாடி, வடச்சேரி,

ஸ்ரீ குருபாஸ்கராச்சாரியா,

K. S. ராமமூர்த்தி சர்மா அவர்களால்

இயற்றி, வெளியிடப்பட்டது.

விநோதன் அச்சுக்கூடம்

சென்னை.

1950

விலை அணா 6

N50

முன்னுரை

எல்லா மதங்களிலும் சிரேஷ்டமாக பக்தி மார்க்கங்களை எல்லோரும் அறிவதற்காக பெரியோர்கள் அநேக நூல்களை இயற்றினார்கள். நிஷ்க்காம, கர்ம பக்தியினால் சித்த சுத்தி ஏற்பட்டு, உத்தம தத்வ விசாரணைச்செய்து சர்வ துக்க நிவர்த்தியாய் பரமானந்த பிராப்தியான மோக்ஷத்தையடைவதற்கு சாதக மேற்படுவதோடு இதர முக்கிய வேதாந்த தத்வ நூல்களை வாசிப்பதற்கு இது ஓர் பிரதான நூலாக இருக்கும். இந்நூலை வாசித்து கருத்தை தெளிவுற உணர்ந்து நடை, நயத்தையும் ஆராய்ச்சி செய்து தெரிந்து கொள்ளுதல்வேண்டும். பழையனவும், புதியனவுமான பலவகை நூல்களினின்றும் ஆராய்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பாடலும் ஒவ்வோர் வகையில் இனிமையுடன் பக்தியை ஊட்டவல்லது. இதில் ஏதாவது பிழைகள் இருக்குமேயாகில் "மானிடர்கள் தோஷசுபாவமுள்ளவர்களே" என்ற சுருதியின் கருத்தை அறிந்தவர்களாக கவனித்து சேர்த்து வாசித்து எனக்கு தெரியப்படுத்துவார்களென நம்பிக்கையுடன் பிரார்த்திக்கின்றேன்.

K. S. ராமமூர்த்தி சர்மா,

வடச்சேரி
வாணியம்பாடி P. O.
(15—3—50)

OFFICE OF THE REGISTRAR OF

உ

சுபம்

ஸ்ரீராமஜெயம்.

பக்தி

பக்தி செல்வத்தால் வருவதில்லை; திரேக ஆரோக்கியத்தால் வருவதில்லை; நாம் பெரிதும் விரும்பும் நிலையற்ற இன்பங்களால் வருவதில்லை; சத்தியம்; தயை, ஞானம், வைராக்கியம், பக்தி இவைமனத்தில் ஏற்படும் நம் மனம் சர்வஜீவன்களிடத்திலும் பேதமையின்றி சாத்வீகம், தயை முதலிய விசுவாச குணங்களுடன் இருத்தல் வேண்டும். கபடமின்றி உண்மையான பக்தி மார்க்கமே இம்மானிட வாழ்க்கைக்கு முக்கியமாகும். ஞான, வைராக்கியமே பக்தியை வளரச் செய்யும். ஞான மார்க்கத்தில் வைராக்கியமே (பிரதிக்ஞை) பிரதானமாகும். வைராக்கியத்தினால் பக்தி பெருகும். பக்தியினால் நித்தியானந்த பகவத் சரணாகதியை அடையலாம்.

நாம் மானிடராய் பிறந்தோம். நம் வாழ்க்கையில் நிலையற்ற சில இன்பங்களைப் பெற்றும் முடிவில் பெரிதும் துன்பங்களை அடைகின்றோம். பணத்தால் நம் கவலை நீங்குமென நினைத்து மிக்க பிராசையுடன் தொழிலைக் கவனித்து தனம் தேடுகின்றோம். இவ்வாசையில் பகைமை, பொறுமை, ஈயாலமை முதலியவைகள் நம் மனதில் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் பேதமையாக நடந்துக்கொள்ளு

கிறோம். நம் மனதில் இவ்வாரான தீய எண்ணங்களுக்கு இடமே இருக்கக்கூடாது.

" காமக்ரோத லோபமோக மதமாத்ச்சரியம் "

என்னும் தீயவழிகள் நம் மன நிம்மதியைக் கெடுத்து விடுகின்றது.

சிறுகதை

காமம்

வயது முதிர்ந்த கிழவரொருவர் தன் மகனை மிக்க பணம் செலவு செய்து படிக்க வைத்தார். பொருள் தேடி அவனுக்குச் சம்பாதித்து வைத்தார். பெரிய இடத்தில் பெண் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தார். பெண் வாழ்க்கைக்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் மகன் தன் காதலியுடன் தனியாக குடும்ப வாழ்க்கை நடத்த எத்தனிக்கிறான். வயது முதிர்ந்த தன் தாய் தந்தையரையும், தன் பால்ய வயது முதல் தன்னுடன் வளர்ந்த உடன்பிறந்தோரையும் மறந்து, உண்மையில் ஒரு குற்றமும் செய்யாத இவர்களின் பேரில் அடாத சில குற்றங்களைச் சொல்லி காமாந்தகாரனாய் காதலிக்குத்தாசனாய் தனியாகக் காதலியுடன் குடும்ப வாழ்க்கை நடத்துகிறான்.

" துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளார்
இன்பமே காமுறுவரேழையார்—இன்பம்
இசைதொறு மற்றதனின்னுமை நோக்கிப்
பசைதல் பரியாதாமேல் "
—நாலடியார்.

இல்லற வாழ்க்கையில் நிலையற்றதாகிய சிற்றின்பம் சிறிதே ஆகும். அத்தகைய சிற்றின்பத்தை விரும்புவோர்க்கு மேன்மேலும் மிகுந்த துன்பமே உண்டாகும்.

அறிவில்லாதவர்கள் இச் சிற்றின்பத்தையே விரும்புவார்கள்.

பலிபீடத்தில் பூசாரியின் கையாயுதத்தால் வெட்டுவதற்கு நிறுத்தப்பட்டிருக்கும் ஆடானது, தன் கழுத்தில் போடுவதற்கு கையில் வைத்திருக்கும் புஷ்பமாலையிலுள்ள தழைகளை விருப்பத்தோடு தின்று சந்தோஷமடைவதைப் போல மனிதர் நிலையில்லாத இளமையோடும் கூடி சிற்றின்பத்தைப்பற்றி மகிழும் மகிழ்ச்சியானது நிலையற்ற சந்தோஷமுண்டாகும். இத்தகைய சிற்றின்பத்தை விரும்பாது பேரின்பத்திற்கேதுவாகிய பக்தியை விரும்புவோர் அறிவால் நிறைந்த பக்திமான்களாவார்கள்.

மேலும்

"தல்லிதன்றிமீத தயலேனி புத்ருண்டு
புட்டனேமிவாடு கிட்டனேமி
புட்டலேனி செதலு புட்டதாகிட்டதா
விஸ்வதாபிராம வினுரவேமா" —வேமன்னர்.

புற்றில் செல்லு பிறந்தாலும் என்ன பிரயோஜனம், இறந்தாலும் நமக்கென்ன நஷ்டம், அவ்வண்ணமே தாய் தந்தையரிடத்தில் பிரீதியில்லாத குமாரன் இறந்தென்ன அல்லது அவன் வாழ்ந்தென்ன பிரயோஜனம்? ஒன்றுமில்லை.

நாம் தகப்பனாரின் விந்துவால் தாயார் வயற்றில் பத்து மாதம் வரையிலிருந்து, அவயங்களெல்லாம் விருத்தியாகி, நம்மால் அநேக சங்கடங்களை யடைந்ததும், பாராட்டாமல் நம்மைப் பெற்று, பேச சக்தியற்று இருக்கும் பொழுது நமக்கு வேண்டிய உபசாரங்களை செய்து, நம்மை வளர்த்து வந்த தாய் தந்தையரிடத்தில் அன்பில்லாமற் போனால் அப்பேர்க்கொற்ற குமாரன் இருந்தென்ன

அல்லது இறந்தென்ன ஆதலால், நாம், நம் பெற்றோ ரிடத்தில் பூரண அன்பு பூண்டிருப்பதே நம் கடமையாகும்.

பகைமை

" பகையென்னும் பண்பிலதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற்றன்று " —குறள்.

பகை என்று சொல்லக்கூடிய தீமையை ஒருவர் விளை யாட்டிலுங் கூட விரும்புவது இயற்கையாகவே நல்ல தல்ல.

" பகல் கருதிப்பற்று செயினு மிகல்கருதி
யின்னு செய்யாமை தலை " —குறள்.

தம்மோடு சேராமையைக் கருதி ஒருவன் தீமையை செய்தானாயினும், அத்தீமையைக் கருதி தாமவனுக்கு தீமையை செய்யாமையே உயர்ந்தது.

ஒருவர் தம் பகைவரை தீவினைகளால் வெல்லுதல் பாவச் செயலாகும். அப்பாவச் செயல்களினால் அவருக் குத் துன்பமே யுண்டாகும். அறிவுடையார் இத்தீவினையை விரும்பமாட்டார். ஆதலால் நம் மனதில் இத்தீவினை களுக்கு இடமே இருக்கக்கூடாது.

" பகை நட்பாங்காலம் வருங்கான்முகநட்
டகநட் பொரீஇ விடல் " —குறள்.

அவ்வாறான பகைவர் பின்பு ஒரு காலத்தில் நம் மீது அன்பு பூண்டு நட்பராக இருக்க வருவாரானால், அப் பகைவரால் நமக்கு முன் ஏற்பட்ட தீங்குகளை நம் மனதில் நினையாமல், முகமலர்ச்சியுடன் நட்பு செய்துக்

கொள்ள வேண்டும். பின்பும் பகைமை விளையாதிருக்கும் வழிகளில் நடந்து கொள்ள வேண்டும்.

தமக்குத் தீங்குகளைச் செய்த பகைவரின் மனதை அத்தீய எண்ணங்களிலிருந்து அகற்றி அவருடன் அன்பு கொண்டு நட்பராக வாழ்வோரின் பெருமை மிகவும் சிறந்ததாகும்.

ஈயாமை

" எத்தனை யானு மியைந்த வளவினால்
சிற்றஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வ மெய்தியக்காற்பின்னறிது மென்பார்
அழிந்தார் பழிகடலத்துள் " —நாலடியார்.

தமக்கு கிடைக்கும் பொருளில் தம்மாலியன்ற வரையில் ஈகையாகிய தர்மங்களை சிறிதேனும் செய்தவர்கள் புண்ணியத்தைப் பெற்றுச் சிறப்படைவார்கள். அவ்வாறு செய்யாமல் மிகுந்த செல்வமுண்டானால் பின்பு தர்மஞ் செய்து கொள்ளலாமென்று காலத்தை வீணாகக் கழிப்பவர்கள் பாவத்தை யடைந்து வருந்துவார்கள்.

" நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று " —குறள்.

மனிதர்க்கு யாசித்தல் தீது, ஈதல் நன்று, ஆதலின் மனிதர் வறுமையால் கையில் பொருளில்லாத காலத்திலும், தாம் பிறரிடம் பொருளை யாசிக்காமல் பிறர்க்கு தர்மஞ் செய்தலே மிகச் சிறந்ததாகும்.

தாம் தேடிய பொருளை தான தர்மங்கள் செய்யாமல் சேர்த்துவைக்கும் உலோபி, அவன் இறந்த பிறகு அப்பொருளை அவனுடைய உறவினர்கள் அடைவார்கள். அவன்

உயிருடனிருக்கும்போது அதனை ஒரு நல்வழியிலும், பயன் படுத்தாம லிருந்ததால் அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் சிறப்பில்லை. அவன் அதனை பிறர்க்குக் கொடுத்தால் அது குறையுமென்றுக் கருதி கொடாமலிருக்க லாம். பொருள் குறைவும், விருத்தியும், முற்பிறப்பின் வினைப்படி நடைபெறும். நம்மால் ஆகுவது ஒன்றுமில்லை ஆதலால் பொருளானது தான தர்மங்களைச் செய்து மனிதர் நற்கதியடைவதற்கே எற்பட்டதாகு மென்பதை யுணர்ந்து தர்ம வழியில் செலவிடுவோர்க்கு புண்ணியமும் புகழு முண்டாகும்.

கடுஞ்சொல்

" கடுக்கெனச் சொல்வற்றாங் கண்ணோட்ட மின்றா
மிடுக்கண் பிறர்மாட்டுவக்கு—மடுத்தடுத்து
வேகமுடைத்தாம் விறன்மலை நன்னாட
வேகுமா மென்னுமாங் கீழ் " —நாலடியார்.

கீழ்மகனின் இயற்கை, கடுஞ்சொற்கள் கூறுதலும், பிறரிடத்தில் பட்சமின்றி யிருத்தலும், பிறருக்குண்டாகும் துன்பங்கண்டு மகிழ்வடைதலும், அடிக்கடி கோபாவேசங் கொள்ளுதலும், கண்ட இடங்களுக்கெல்லாம் செல்லு தலும், பிறரை இகழ்ந்து பேசுதலாகும்.

இக்கடுஞ் சொற்களால் சுகமின்றி மிக்க துன்பமே விளைவிக்கின்றது. இதனால் பெரும் குற்றமும், அவ மதிப்பும் ஏற்படுகின்றது. இவர்களின் திரேகாரோக்கியம் குன்றியும், இவர்கள் எவ்வளவு பெரிய செல்வ நிலை யிலிருப்பினும், அச்செல்வ நிலை நீடுதலின்றி வீணாகக் கெடும். அறிவுடையோர்களைப் பிறர் குற்ற முண்டாகும் படி திட்டினும், தங்களுக்குள்ள இயற்கையாகிய

விசுவாசகுணம் மாறிப்பதிலுக்கு அவரைத் திட்டத் தொடங்கிக் கடுஞ்சொற்களைத் தங்கள் வாயினற் கூற மாட்டார்கள்.

" அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப்பெறின் " —குறள்.

நாம் பிறரைக் கண்டபொழுது நம் முகமானது இனிய மலர்ச்சியுடனும், பிறருக்குச் சந்தோஷமுண்டாகும்படியான வார்த்தைகளால் பேசுவோமாளுல், பிறருக்கு மனமார தேவையானப் பொருளைக் கொடுத்துதவியதைவிட நன்மையை யளிக்கும்.

தர்மத்தையளிக்கும் இனிய சொற்கள் தன் நாவிலிருக்க அவற்றைக் கூருமல் பாவமுண்டாக்கும் கடுஞ்சொற்களை ஒருவன் சொல்லுதல், இனிய கனிகள் தன் கையிலிருக்க அவற்றை நுகர்ந்து பாராமல், பிஞ்சு, காய்களை நுகர்ந்து பார்த்தது போலாகும். பிறரிடம் இனிய சொற்களைக் கூறுவோர்க்கு மிக்க மகிழ்ச்சியை யளிக்கும். இம்மையில் தர்மத்தையும், மறுமையில் புண்யத்தையுமுண்டாக்கும்.

மேலும்

" கல்லுகிச்சினடலு சல்லகிய்யகலேரு
கொல்லகிச்சினட்லு குடுவலேரு
புல்லகிச்சினட்லு புண்யானிகியரயா
விஸ்வதாபிராம விஞரவேமா " —வேமன்னர்.

மனிதர்கள் மதுபானம் செய்ய செலவிடுகிற பணம் பால், தயிர், நெய் முதலிய நல்ல வஸ்துக்களுக்கு செலவு செய்யாமலும், பணம் சேர்த்து வைத்து திருடருக்கும், வீண்வழக்குகளுக்கும், செலவு செய்கிற பணம் தாங்கள்

உண்ணாமலும், தாசி முதலான துர் விஷயமாய் செல விடும் திரவியம் சத்காரியங்களுக்கு செலவு செய்யாம லிருக்கிறார்கள்.

மேற்கூறியவாறு இன்னும் அனேக தீயவழிகளில் நடந்து கொள்ளுகிறார்கள். செயற்கையில் உண்பதும் உறங்குவதும், தீய வழிகளில் நடந்து கொள்வதைத் தவிர இப்பிறப்புரிமையில் கண்டது யாது? இப்பிராணன் இப்பூத உடலைப் பிரிந்து போகும் வரை இவ்வாராக நடப்பது தானா இப்பிறப்புரிமையின் கடமை?

“ அரிதரிது மானிடராதலரிது ”

மனிதர் பிறப்பு உயர்ந்தது. அத்தகைய பிறப்பைப் பெற்ற மனிதர்களும் இறந்து பிணங்களாய் விட்டால் அப்பிணங்களை இழிந்தவைகளாகவே மற்ற மனிதர்களால் கருதப்படும். விலங்குகளையும், பறவைகளையும், கொன்று தின்போர் மிகவும் இழிந்தவர்களென்பதும், கொடியர்களென்பதும், அவர்களுடைய செயல் தீவினையாகு மென்பதாம். செல்வமுடையவர்களில் பெரும்பாலோர் உண்டு. கொழுத்துச் சோம்பேறிகளாய் ஒரு தொழிலுமின்றி எப்பொழுதும் உறக்கத்திலேயே கிடந்தொழிவதை அனுபவத்திற் காணலாம். அத்தகைய அக்ஞானிகளுக்கு முக்தியடைவதற்கேதுவான ஆத்மஞானமிராதே! ஆகையால் இப்பிறப்புரிமையில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்று யோசிக்க வேண்டாமா!

“ அகண்டமண்டலாகாரம் வியாப்த ஏன
சாரசரம் தத்பதம் தர்ஸிதம்
ஏனதஸ்மை ஸ்ரீகுருவேநம : —நீதிசாஸ்திரம்.

நாம் ஜனித்த இப் பூமண்டலமானது அளவு கடந்து இருக்கிறது. இதிலிருப்பவைகளில் அழிவுற்றது எது

அழியாத்தன்மையுடையது எது? என்று நாம் யோசிக்க வேண்டுமல்லவா!

இப்பிறப்புரிமை நமக்கு ஏற்பட்டது இனி இறப்புரிமை நமக்கு காத்திருக்கிறதென்பதை சிந்திக்க வேண்டாமா! அறிவில்லாதவர் தாம் பெற்ற செல்வத்தைக் கொண்டு தாம் இன்பத்தையடையாமலும், தம்பிராணனுக்கு பாதுகாப்பாகிய அறநெறியையும் செய்யாமலும், செல்வமும், யாக்கையும், நிலையற்றனவென்பதை யுணராமலும், அவை எப்பொழுதுமிருக்குமென்று நினைத்து இம்மானிட வாழ்க்கையில் மாய்கையிலேயே வீணாக காலங் கழித்து வந்தால்.

" க்ஞானேன ஹீனஹ: பசுபிஹி சமானஹ:" —சுருதி.

மனிதர்களுக்கும், ஜீவஜந்துக்களுக்கும் பிராணனை ஆண்டவன் படைத்திருக்கிறார். ஆனால் ஜீவஜந்துக்களுக்கு பேசும் சக்தி இல்லை. மனிதர்களுக்கு பேசும் சக்தியை ஆண்டவன் அருள்புரிந்திருக்கிறார். இவ்வாராக நமக்கு படைத்திருப்பினும் ஜீவஜந்துக்களைப்போல். உண்பதும், உறங்குவதும், உழைப்பதும், தவிர வேறு எதையும் சிந்திக்காமலிருந்தால், நாம் ஜீவஜந்துக்களுக்கு சமானமாகுவோமல்லவா! நாம் நம் நாவினால் பேசுகின்றோம். புண்ய, நீதி, நெறி, புராணங்களை வாசிக்கின்றோம். வாசித்து, அறிவை ஞானமார்க்கங்களில் வளர்த்தி பக்தி வழிகளில் ஈடுபடலாகாதா! ஞானத்தை அபிவிருத்தி செய்வதற்காகவே இந்நாவை ஆண்டவன் நமக்கு அருள் புரிந்திருக்கிறார்.

" தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந்தேரிற் பிறிதில்லை — ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்தவுடம்பும் பயமின்றே
கூற்றங் கொண்டோடும்பொழுது "

நாம் நன்ருக ஆலோசித்துப் பார்க்கு மளவில் மனிதர், மனைவி மக்களுடன் செல்வ நிலையோடு உலகினில் பல நிலையற்ற இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த போதிலும், எமன் அம்மனிதரின் உயிரைக் கொண்டு செல்லுங் காலத்தில், அவர் செய்திருந்த நல்வினை, தீவினைக் கர்மங்கள் அவருடன் செல்லுமே ஒழிய அந்நிலையற்ற இன்பங்கள் எதுவும் அவருடன் செல்லாது. அவர் பாதுகாத்து வந்த ஆடையாபரணங்களால் அலங்கரித்த உடம்பும் உடன் வராமல், பயனற்றதாய் நெருப்பில் எரிந்தோ, மண்ணில் புதைந்தோ மறைந்தொழியும்.

ஆதலால், அநித்தியமான உலகவாழ்வில் நம்மை மனம் இழுத்துச்செல்ல அது சென்றவழியே சென்று நிலையற்ற இன்ப துன்பங்களை விரும்பாது நற்கதிக்கேதுவான முக்தியடைவதற்குரிய மார்க்கங்களை தேடிக்கொள்ளுமாறு நம் மனதிற்கு வற்புறுத்தி உணர்த்தவேண்டும்.

" க்ருதே தபஸ்சரேணைவ, த்ரேதாயாம் யக்ஞமேவச,
த்வாபரே அர்ச்சனம் ப்ரோக்தம், கலௌஸங்கீர்த்ய கேஸவம்,
ஸத்யாதித்ரியுகேபோத, வைராக்யௌ முக்திஸாதனௌ,
கலௌது கேவலாபக்தி, ப்ரம்மஸாயுஜ்யகாரிணீ,
நாஸ்திநாஸ்தி மஹாபாக! கலிகாலசமம்யுகம்,
ஸ்மரணாத்கீர்த்தநாதேவ, ப்ராப்னோதிபரமாம்கதிம்,
தியானாத்பாபானி நஸ்யந்தி, தியானாத்மோக்ஷஸம் ஸ்திதி
தியானாத்ப்ரவீததி ஹரிர்த்யானம், சர்வார்தசாதனம்,
நாஸ்திதியானம் சமம்தீர்த்தம், நாஸ்திதியானம் சமம்தப:.
நாஸ்திதியான சமோயக்ஞ, தஸ்மாத்தியானம் சமாசரேத்,
கலௌபக்தி, கலௌபக்தி, ர்பக்த்யா க்ருஷ்ணபுரஸ்தித:,

க்ருதயுகத்தில் தபோ பலத்திலும், திரேதா யுகத்தில் யக்ஞ, யாகங்கள் வளர்த்தியும், துவாபர யுகத்தில் அர்ச்சனைகளாலும், கலியுகத்தில் சம்கீர்த்தனைகளாலும், ஜனங்

கள் பகவானைப் பூஜித்து முக்தி பெறுவார்கள். சத்ய யுகங்களான கிருத, த்ரேத, துவாபரயுகங்களில் ஜனங்கள் மிக்க் வைராக்கியத்தை மேற்கொண்டு பகவானைப் பூஜித்து முக்தி அடைவார்கள். ஆனால் கலியுகத்திலே.

" காமக்ரோத லோபமோஹ மதமாத்ச்சரியம் "

என்னும் தீயசெயல்களில் மிக்க வைராக்கியத்துடன் நடந்துக் கொள்வதை இன்றும் காணலாம். இத்தீவினைகளை அறவே விட்டு, மற்ற யுகங்களைவிட முக்தி பெறுவதற்கு கஷ்டமின்றியும், சுலபமான பக்தி வழிகளில் நம் ஞானத்தை செலுத்தி ஆண்டவனைப்பூஜிக்கவேண்டும். இக்கலியுகத்தில் மாத்திரம், சுலபமான பக்தி வழிகளில் ஈடுபட்டு முக்தி பெறலாம். மற்ற யுகங்களில் ஞான மார்க்கங்களில் மிக்க வைராக்கியத்துடன் ஈடுபட்டு முக்தி பெறலாமேயொழிய இச் சுலபமான பக்திவழிகளில் முக்தி அடையமுடியாது. மேலும்; தியானத்திற்கு சமமான தீர்த்தமுமில்லை, தியானத்திற்கு சமமான தபசுமில்லை, தியானத்திற்கு சமமான யக்ஞயாகமுமில்லை, தியானத்தினல் நாம் முன்செய்த தீவினைகள் அரவே நசிக்கும். தியானத்தினல் மோக்ஷத்தை அடையலாம். பகவத் தியானத்தினல் பகவான் பிரீதி அடைவார், ஸ்ரீஹரித்தியானத்தினல் தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களுக்கு சாதகமாகும். ஆதலால்இதர எண்ணங்களை விட்டு தியான மார்க்கங்களில் ஈடுபடுவோர்கள் சிரேஷ்ட புருஷர்களாவார்கள். கலியுகத்தில் பக்தியே முக்கியமானதும், சிரேஷ்டமானதுமாகும். பக்திமான்களுக்கு பகவான் பிரசன்னமாவாரென்று பாகவதத்திலும், ஸ்கந்த புராணத்திலும், யோக சாஸ்திராதி நூல்களிலும் தெரியவருகிறது. பக்திக்கும், ஞானத்திற்கும் பெயர்கள் மட்டும் மாறுபட்டிருப்பினும், பரிபக்வ காலங்களில் இரண்டும் ஒன்ருகவே ஏற்படுகின்

றது. புஷ்பமானது பழமாவதைப் போலவும், கரும்புப் பாலானது வெல்லம், கற்கண்டாவதைப் போலவும் நிர்மல மான பக்தியினால் ஜீவஸ்வரூபம் மாறி சிவஸ்வ ரூப மாகின்றது.

"விதிநா விதிநாவாபி பக்த்யாயேமாமுபாஸதே
தேப்ய: பலம் ப்ரயச்சாமி ப்ரஸன்னோஹம் நஸம்ஸய:"

—சிவகீதை

நாம் யாவரானாலும் சரி, விதிப்ரகாரமோ, விதி தெரியாமலோ பக்தியுடன் சிவபெருமானைப் பூஜிப்போமானால் நமக்கு அவர் பிரசன்னமாகி நாம் கோறிய பலன்களை நிறைவேற்றுவார். இதில் சந்தேகமில்லை.

"எதுசர்வாணி கர்மாணி, மயிஸந்யஸ்யமத்பரா,
அனன்யேனைவ யோகேன, மாம்த்யாயந்த உபாஸதே,
தேஷாமஹம் ஸமுத்தார்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத்,
பவாமிந சிராத்பார்த்த ! மய்யாவேஸிதசேதஸாம் "

—பகவத்கீதை

நாம் யாரொருவர் சர்வகர்மங்களிலும், பகவான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின்மீது சமர்ப்பித்து அவரே, தாய் தந்தை, குரு என்ற பாவத்துடன் அவர் மீது துல்யமான புத்தியுடையவராய், சலனு சக்தியான பக்தியோகங்களுடன் தியானிப்போமானால், நம்மை, அவர் ஜனன மரண ரூபமான மஹா துக்ககரமான சம்ஸார சாகரத்திலிருந்து காப்பாற்றுவார்.

"தேஷாம் ஸததயுக்தானாம் பஜதாம்ப்ரீதிபூர்வகம்,
ததாமி புத்தியோகம்தம், எனமாமுபயாந்திதே,
தேஷாமேவ வானுகம்பார்த்தா, மஹமக்ஞானஜம்தம:,
நாஸயாம்யா த்மபாவஸ்தோ, க்ஞானதீபேனபாஸ்வதா"

—பகவத்கீதை.

நாம் யாரொருவர் மிகவும் ப்ரீதியுடன் அவரை பூஜிப் போமேயானல் நமக்கு அவரை அடையும்படியான மார்க் கம் தெரியாமைபோமேயானுல் ஞான மார்க்கத்தை அவரே காட்டுவார். நம் ஹ்ருதயத்தில் அவரே பிரவேசமாகி, பிரகாசமான ஞான தீபத்தை உண்டாக்கி, அக்ஞானந்த காரத்தைப் போக்கடித்து அன்புடன் கூடி அவரே நம்மை புண்யவான்களாகச் செய்வார்.

" சர்வதர்மாந்பரித்யஜ்ய, மாமேகம் சரணம்வ்ரஜ,
அஹம்த்வா சர்வபாபேப்யோ, மோக்ஷயிஷ்யாமிமாஸுச:
—பகவத்கீதை

நாம் தர்மா தர்மங்களைப் பார்க்கவேண்டியதில்லை, அக்ஞானர்களின் வார்த்தைகளை நாம் கேளாமல் அவ ரையே சரணடைவோம். அவர் சர்வ பாபங்களிலிருந்தும் நம்மை ரக்ஷிப்பார். சோகமடையாமல், சம்ஸயங்களை விட்டு நம்பிக்கையுடன் பிரகாசிப்போம்.

மேற் கூறியவாறு பக்தி வழிகளில் ஞானத்தைச் செலுத்த வேண்டுமென்று வாய்மொழியில், சொல்லியே இப்பிறப்பின் ஆயுட் காலத்தை வீணில் போக்கடித்தால் என்ன பிரயோஜனம்! கிரயாம்சை மூல்யமாய் ஈடுபட வேண்டுமல்லவா? நம் ஞானத்தை பக்தி வழிகளில் செலுத்துவதற்கு கிரயாம்சை முக்கிய அவசியமல்லவா! கிரயாம்சையால் பக்தியும் பெருகும். கிரயாம்சையின்றி எக்காரியத்தையும் நாம் சாதிக்க முடியாது. சில ஜனங் கள் இன்றும் கீழ்க்கண்டவாறு பேசக்காணலாம்.

எல்லாவற்றிற்கும் மனமே காரணம், மனம் பரிசுத்த மில்லாமல் பக்திவழிகளில் ஈடுபட்டால் என்ன பிரயோ ஜனம்? என்று சொல்லுகின்றனர். ஆம், வாஸ்தவம்.

எல்லாவற்றிற்கும் மனமே முக்கியமேற்படுகின்றது. ஆனால், எக்காரியத்தையும் நம் கனதிலேயே நினைத்துக் கொண்டிருந்தால் சாதிக்க முடியுமா? பரிசுத்தமான மனம் ஏற்பட்டதற்கு கிரயாம்சை மூலமாகத்தானே நிரூபிக்கவும், பெருக்கவும் வேண்டும்.

"அனகனனக இராக மதிஸயில்லு சனுண்டு
தினக தினகவேமு தீபுனுண்டு
சாதகமுனபனுலு ஸமகூருதரலோன
விஸ்வதாபிராம வினுரவேமா" —வேமன்னர்.

பாட பாட பழக்கத்தால் இராகம் மிக்க ரம்மியமாயிருக்கும். மிகவும் கசப்பான வேப்பிலைக் கூட புசிக்கப் புசிக்கப் பழக்கத்தால் மதுரமாகும்.

அதுபோலவே, இவ்வுலகில் அப்பியாசத்தால் (கிரியாம்சை) எந்த காரியமும் சாதனமேற்படுகின்றது. அப்பியாசத்தால் சாதிக்காத ஒரு விஷயமும் இவ்வுலகத்தில் இல்லை. ஆகையால் நாம் திடமாக நம் மனோபுத்தியை பகவான்மீது நிலை நிறுத்துவதற்கு சக்தியற்றவராய் இருப்போமானால், அப்பியாசத்துடன் அவரை அடைவதற்குப் பிரயத்தினிக்க வேண்டும். அவ்வாறு பிரயத்தினித்துவர, நம்மனோ புத்தியும் பக்தி வழிகளில் பெருகும்.

சிவனைப் பூஜிப்பதா? விஷ்ணுவை பூஜிப்பதா?

"சிவாய விஷ்ணுரூபாயா, சிவரூபாய விஷ்ணுவே,
சிவஸ்ய ஹ்ருதயம்விஷ்ணு, விஷ்ணுஸ்சஹ்ருதயம்சிவா"
--தியானம்ருதம்.

விஷ்ணுஸ்வரூபமானவர் சிவன், சிவஸ்வரூபமானவர் விஷ்ணு, சிவனுடைய ஹ்ருதயமானது விஷ்ணு, விஷ்ணு

வின் ஹ்ருதயமானது சிவன். ஆகையால் அவ்வுபயத்ராளுக்கும் பேதமை இல்லை.

" நாராயணோ சிவோவிஷ்ணு, சங்கர: புருஷோத்தம:
ஏதாத்ருக்ன்ஞாமபி,ர்ப்ரம்மபரம், ப்ரோக்தம் சநாதனம் "
—தியானம்ருதம்.

நாராயணன், சிவன், விஷ்ணு, சங்கரர், புருஷோத்தமர் முதலிய நாமதேயங்களினால் சநாதனமான பரப்ரம்மமே சொல்லப்பட்டது. நாமதேயங்கள் மாறுபட்டிருக்கின்றனவேயொழிய மூர்த்தி ஒன்றேயாகும்.

சிவன், விஷ்ணு முதலிய நாமதேயங்கள் மாறுபட்டிருப்பினும் அவை யாவும் ஏகமூர்த்தியாகிய பரப்ரம்மத்தையே சாறுகின்றது. ஆகையால் நாம் சிவனையும், விஷ்ணுவையும் பேதமையாக நினையாமல் ஏகஸ்வரூபமாக நினைத்து பக்தி வழிகளில் ஈடுபடவேண்டும்.

"யோவிஷ்ணுஸ்ஸ, ஸ்வயம் பிரம்மா, யோபிரம்மா மஹேஸ்வர:
வேதத்ரயேச யக்ஞேஸ்மின் பண்டிதேஷ்வேஷு நிஸ்சய:,
—தியானம்ருதம்

விஷ்ணு எவரோ அவரேஸ்வயமான பிரம்மா, பிரம்மா எவரோ அவரே மஹேஸ்வரர் என்று வேதங்களிலும், அவை விதித்தயக்ஞங்களிலும், பண்டிதர்களிலும் நிச்சியிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருந்தும் நாம் பேதமையாக நினைப்போமானால்.

"மத்பக்த சங்கரத்வேஷி மத்வேஷி சங்கரப்ரியா:,
தாவுபௌ நரகம்யாதோ, யாவச்சந்த்ர திவாகரம்:,
எனவிஷ்ணுவின் திருவாய்மொழி. —தியானம்ருதம்

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 113241 EGMORE, MADRAS

சிவனை த்வேஷிக்கும் விஷ்ணு பக்தனும், விஷ்ணுவை த்வேஷிக்கும் சிவபக்தனும், சூர்யசந்திரர்கள் இருக்கும் காலம்வரை, நரக பாதையையே அடைவார்கள்.

"ஹரம் ஹரிம் விதாதாரம், ய: பஸ்யேதேகரூபிணம்,
ஸயாதிபரமானந்தம் ஸயோகீபிரம்ம சோச்யதே"

—தியானம்ருதம்

சிவனை, விஷ்ணுவை, பிரம்மாவை, ஏகரூபமாக யாரொருவர் பார்க்கின்றனரோ, அவர் பரமானந்தத்தை அடைவார். அவரே யோகி, அவரே பிரம்மா, என்று சொல்லப்படுகிறது. ஆகையால் பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரர் என்ற பேதமையை விட்டு அவையாவும் த்ரிமூர்த்தி ஸ்வரூபமென்று நினைத்து பக்தி வழிகளில் ஈடுபடவேண்டும்.

விக்கிரஹ ஆராதனை தேவையா? இல்லையா?

நம் முன்னோர்கள் முக்கப் பொருள் செலவு செய்து தேவாலயங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவைகளிலிருக்கும் விக்கிரஹங்கள் பகவானின் பிரதிபிம்பமாகும்.

மேலும், முக்கிய நகரங்களில் புண்ணியவான்களின் உருவச்சிலைகளையும், பொதுஜன கட்டிடங்களில் உருவப் படங்களையும், வைத்திருக்கிறார்கள். அவையாவும், அப் புண்ணியவான்களின் பிரதிபிம்பமல்லவா! அவைகளைத் தூஷித்தாலும், பூஷித்தாலும், அப்புண்ணியவான் களையே சாருமல்லவா! ஒருவருடைய பிரதிபிம்பமானது நடை, உடை, பாவனையில் மாறுபட்டிருப்பினும், அவை யாவும் அவரையே சார்ந்ததாகும். அதுபோல, விக்கிரஹங்கள் பகவானின் பிரதி பிம்பங்களாகும், அவைகள் நாமரூபத்தில் மாறுபட்டிருப்பினும், அவையாவும் ஏகஸ்வரூபத்தையே சாருகின்றது.

நமது தேசத்தில் அவதரித்த முனீஸ்வரர்கள் உலக போக்கை யறிந்து ஜனங்களிடம் தெய்வபக்தி பெருகு வதற்கு மூர்த்திமூலமாயும், ஸ்தல மூலமாயும், யக்ஞ-யாகங்கள் மூலமாயும், தீர்த்தங்கள் மூலமாயும், வணக்கத்தைச் செலுத்தி வந்தனர். அவைகளில், கர்மத்தைச் செய்ய ஓர் ஆற்றலையும், ஆத்மாவை உறுதியாக்கிக் கொள்ள ஓர் தூய்மையையும் தரிசனமானது உண்டாக்குகின்றது. நம் நாட்டில் எத்தனையோ புண்ணியவான்கள் எவ்வளவோ பொருள் செலவு செய்து நிரம்ப தேவாலயங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவ்வாலயங்களின் விக்கிரஹ மூலமாகவே இன்றும் கோடிக்கணக்கானவர்களிடம் ஈசுவரபக்தி பெருகி வருகின்றது.

இக்காரணங்களை அறிவுடையோர் ஆராய்ந்தறிதல் வேண்டும். விக்கிரஹ ஆராதனைக்குரிய ஆலயங்களின் ஊழல்களைப்போக்கவேண்டிய தவசியமே, ஆனால் கோயில்களையே அழித்துவிடுவது ஆண்டவனையும், மதததையும் நிராகரிப்பதாகும். கல், செம்பு என்று எண்ணிப் பல தீயச்செயல்களை செய்வது தர்மமாகுமா? விக்கிரஹ வணக்கத்திலே ஜீவித ஈசுவரனை நாம் வணங்குகின்றோம். நம் பிறப்பிற்கு உயிரளித்து நம் நோக்கத்தை நிறைவேற்றவல்லது தேவாலய வணக்கமே.

கலியுகத்தில் சேர, சோழ, பாண்டியர்களுடைய ஆட்சி செல்வாக்குப்பெற்ற காலங்களில், இந்துமத நாகரீகம் முன்னேற்றமடைந்தது. பெரிய தேவாலயங்களை எடுப்பித்து, அவைகளில் மூர்த்திகளை ஸ்தாபித்தார்கள். இவ்வாலயங்களின் நித்திய பணிக்காக நிலதானம் முதலிய அனேக தானங்கள் செய்தார்கள். அக்காலத்தில் நம் தேசத்தில் தேவாலய வணக்கம் உயர்நிலையிலிருந்தது. மத்வ, ஆழ்வாராசாரியான், நாயன்மார்கள் முதலிய சமயா

சாரியார்கள் இம்மூர்த்திகளின்மேல் பக்தி, கசிந்துருகும் வண்ணம் பதிகங்களை பாடியிருக்கிறுர்கள். இந்துமதத்தின் செல்வாக்கு கடல் கடந்தும் சென்றிருக்கிறது. தேவாலய வணக்கம் குறைவினுல் இன்று தேசத்தில் மற்றல்லாக் குறைகளும் காணலாயின.

மனிதர் இப்பூமியில் பிறந்து வளர்ந்து வரும்போது அவருடைய மனம் ஓர் நிலைபெருமல் உலக மாய்கையில் ஈடுபட்டு வருகிறது. மனதை ஓர் நல்வழியில் அடக்கியாளும் சக்தி பெறும்வரையில், மனிதர் அது சென்ற வழியேச்சென்று, அறியாமையோடு மோசம், பொருமை, லோபம் முதலிய பாவச் செயல்களை யொருவருக்கொருவர் செய்து துன்பமடைகின்றனர். அப்பாவங்களை உண்டு பண்ணும் மனதை ஓர் நல்வழியில் நிலை நிறுத்தும் சக்தி ஒரு சில அறிவுடையோர்க்கே யுண்டேத்தவிர, மற்றவர்களுக்கில்லை. அப்பாவங்களால் தம்மை மறந்தும், ஆண்டவனின் உண்மையும் அவர்கள் அறிவதில்லை. அவர்கள் தம்மனதை அடக்கி ஓர் நல்வழியில் மேற்கொள்ளுவது மிக்க துர்பலமாகும். ஆனுல் " உலகை ஜெயித்தவனைவிட மனதை ஜெயித்தவனே வலிமையுள்ளவன் " என்றமுது மொழியை நாம் அறிதல் வேண்டும்.

ஆதலால் மஹருஷிகளும், பண்டிதர்களும் தேவாலய மூலமாக விக்கிரஹ ஆராதன வணக்கத்தை அனுஷ்டித்து, அதற்குரிய சக்திவாய்ந்த மஹா மந்திரங்களால் பூஜித்தும் தியானித்தும் வந்தனர். அவ்வணக்கத்தால் நிலையற்ற மனமும் நிலைத்துவிடும், விக்கிரஹ வணக்கமானது மானிடர்களுக்குண்டான ஆன்மார்த்த வேட்கையைப் பூர்த்தி செய்தும், மனதிற்கு தைரியமூட்டும் சக்தியையுமளிக்கும் நாள்தோறும் ஒருவர் அம்மஹா மந்திரங்களால் பூஜிக்கும் போது அவர் மனதில் வேறு எண்ணங்கள் தோன்ருமல்,

கடவுள் நினைவு ஒன்றே ஏற்பட்டு, அன்புருவாகிய ஆண்டவனைப் பக்தியுடன் தியானிப்போர். பூஜிப்பவருடைய மனம் வேறு நினைவுகளில் எளிதில் செல்லலாமென்றே நம் முன்னோர் பூஜிக்கும் சமயத்தில் வேறு வார்த்தைகள் பேசாமலும், வேறு எண்ணங்கள் எண்ணாமலும் பூஜிக்க வேண்டுமென தர்ம நீதியை விதித்தனர். ஆதலால் நம் கண் முன் விக்கிரஹமிருந்தால், அவ்விக்கிரஹத்தின் மீதே நம் நினைவை கட்டுப்படுத்தி ஞான வைராக்கியத்துடன் ஆண்டவனை பூஜிப்பதற்கு சாதகமாகும் இவ்வாராக பூஜித்து பேறின்பத்தை அடைவோருடைய மனமானது காற்றில்லாத இடத்தில் பொருந்திய தீபமானது எவ்வாறு அசைவின்றியிருக்குமோ அவ்வாறே பரிசுத்தமானவரின் மனம் ஆத்மாவில் நிலையாகப் பொருந்தி ஆண்டவன் நினைவு ஒன்றிலேயே செலுத்தி புண்ணயத்தை பெறுவாராவார்.

ஸ்திரீ, சூத்திரர்களுக்கு பிரம்மவிசாரணையில் அதிகாரமுண்டா ? இல்லையா ?

" தர்மசர்யயா ஜகன்யோவர்ண :
பூர்வம் பூர்வம் வர்ணமாபத்யதே " —ஜீாதிபரிவிருதௌ

தர்மானுஷ்டானத்தினால் தீயகுலத்தில் பிறந்தவனானாலும், நற்குலத்தை அடைகின்றான். ஜாதி எப்போதும் சக்கிரத்தைப்போல் சுழலுகின்றது.

நல்லகுலமென்றூர் தீயகுலமென்றஞ்
சொல்லளவல்லாற் பொருளில்லைத்—தொல்சிறப்பின்
ஒண்பொருளொன்றோ தவங்கல்வியாண்
என்றிவற்றானுகுங் குலம் — நாலடியார்

நல்லகுலம், தீயகுலம் என்பவைகளைப்பற்றி ஆராய்ந்து பார்க்குமளவில் அவற்றிற்குச் சொல்லளவு மாத்திரமே

யல்லாமல் இயற்கையில் நற்குலமென்றும், தீயகுலமென்றும் அர்த்தமில்லை. பழமையான சிறப்பினையுடைய ஒள்ளிய செல்வம், தவம், வாசிப்பு. முயற்சி இவற்றினலே நற்குலமுண்டாகும் இவையில்லாமையே தீயகுலமுண்டாகும்,

" அதர்மசர்யயா பூர்வோவர்ணோ ஜகந்யம் ஜகந்யம்
வர்ணமா பத்யதே " —ஜாதிபரிவிருதௌ.

அனுசாரத்தினல் உயர்குலத்தில் பிறந்தவனுனலும் அதமாதம குலத்தை அடைகின்றான்.

சூத்ரோ பிராம்மணதாமேதி பிராம்மணஸ்சைதி, சூத்திரதாம்,
க்ஷத்திரியாஜ்ஜாதமேவம்து வித்யாத்வைஸ்யாஸ்ததை வச "

சூத்திரகுலத்தில் ஜனித்தவனும் பிரம்மானுஷ்டானத்தினல் பிராம்மணத்வம் அடைகின்றான். பிராம்மணகுலத்தில் ஜனித்தவனும் தபோனுஷ்டான குணங்கள் இல்லையானல் சூத்ரத்வம் அடைகின்றான். அம்மாதிரியே க்ஷத்திரிய குலத்தில் ஜனித்தவனும், வைஸ்யகுலத்தில் ஜனித்தவனும் அடைகின்றனென்று யூகிக்க வேண்டும்.

ஒருவருடைய பிறப்பளவிலேயே உத்தம குலத்தாரென்றும், அதமகுலத்தாரென்றும் பக்திமான்களால் கருதப்படமாட்டார். ஒள்ளிய செல்வம், தவம், கல்வி, நன்முயற்சி முதலியவைகளைக் கொண்டிருந்தால் உத்தம குலத்தாராவரென்பதும் அவையில்லாமையே அதம குலத்தினராவரென்பதாகும். பிறப்பினல் உயர்குலமும், கீழ் குலமும் ஏற்படுவனவல்ல. அறிவு, நன்முயற்சி, முதலிய உண்மையாலுமே ஏற்படுவனவாம்.

" சாதுர்வர்ண்யாம் மயாஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஸ: "
—பகவத்கீதை

சத்வ, ரஜோ, தமோகுணங்களை யனுசரித்தும், தபோத்யானனுஷ்டமான கர்மங்களையனுசரித்தும், நான்குஜாதிகளாக பகவானுல் ஏற்பட்டது.

சர்வ ஜீவராசிகளும் உண்மையில் பரமாத்மாவின் அம்சங்களே, நாமரூபங்கள் மாறுபட்டிருப்பினும் பொருள் ஒன்றேயாகும். ஜகதீஸ்வரர் கருணாமூர்த்தி அல்லவா! தன் அம்சபூதங்களான ஜீவராசிகளும் தன்னுடைய ஸ்வரூபமல்லவா! சர்க்கரையால் செய்த பொம்மையின் பாதத்திலிருந்து சிரசுவரை ஒரே மதுரமாக இருக்குமல்லவா! அதுபோல வேத புருஷரின் முகத்திலிருந்து பிராம்மணனும், புஜத்திலிருந்து க்ஷத்திரியனும், வயிற்றிலிருந்து வைசியனும், பாதத்திலிருந்து சூத்திரனும் ஜன்மித்தார்களென்று சூக்தங்களில் சொல்லி யிருப்பினும் அவர்கள் எல்லோரும் பரமாத்மாவின் ஸ்வரூபங்களே. மாமரமானது மாம்பழத்தைக் காய்க்கும் வேறு பழத்தைக் காய்க்காதே! தென்னைமரமானது தென்னங்காயைக் காய்க்கும் வேறு காய்களைக் காய்க்குமா? காய்க்காதே! ருசிகளும் மாறுபடாது. ஆனுல் பிஞ்சு, காய், பழம் என்ற பேதமைகள் உண்டு. இதற்கு குணம் என்று பெயர். நான்கு ஜாதிகள் என்றால் நான்கு வகுப்பாக அர்த்தமேற்படுகிறது. ஆகையால் மரத்திலிருந்து காய்களை ஒரே சமயத்தில் பறிக்கும்பொழுது அவைகளில் சில பழங்களாகவும், சில காய்களாகவும், சில பிஞ்சுகளாகவும் இருக்குமல்லவா! அம்மாதிரியே சத்வகுணமுள்ளவர்கள் பிராம்மணர்களாகவும், ரஜோகுணமுள்ளவர்கள் க்ஷத்திரியர்களாகவும், திரிகுண, மிஸ்ரமமாகயுள்ளவர்கள் வைசியர்களாகவும், தமோகுணமுள்ளவர்கள் சூத்திரர்களாகவும், சாஸ்திரங்களில் விவரித்திருக்கலாமேயொழிய வேறு எவ்விதமாகவும் ஏற்படாது. பழம் மதுரமாகவும், காய்ப்புளிப்பாயும், பிஞ்சு கசப்பாயும், துவரமாயுமிருக்கும். ஒரே

மரரதின் காய்களே பரிபாகஸ்வபாவம் மாறுபட்டிருக்கும். ஆகையால் அவரவர் சத்வ, ரஜ, தமோகுணங்களை யனுசரித்து ஜாதி பேதமை ஏற்பட்டதே ஒழிய வேறுவிதமாகாது. நாமரூபங்கள் மாறுபட்டிருப்பினும், இவை யாவும் சூக்ஷ்மதிரிஷ்டியில் ஞானத்தை செலுத்திப் பார்ப்போமானல் ஏகமன பரமாத்மாவிலிருந்து உண்டாயிற்றென்று தெரியவரும்.

மேலும் ஸ்ரீவால்மீக தபோநிதி வனவேடர் குலத்திலும் ஸ்ரீவசிஷ்டமுனீஸ்வர் வேசிய குலத்திலும், ஸ்ரீநாரத பகவான் வண்ணார கன்னிகைக்கும், ஸ்ரீமதங்க முனிபுங்கவர் செக்கிலிஸ்திரீக்கும், ஸ்ரீவிசுவாமித்திர முனீஸ்வரர் க்ஷத்திரிய குலத்திலும், அவதரித்து பரமேஸ்வர தியானத்தினல் பிர்ம்மரூஷி ஆனுர்கள். அதைப்போலவே ஸ்ரீகுருநானக்கயோகீஸ்வரரும், வேமன்னுவும் சூத்தியகுலத்தில் ஜனித்து தபசிரேஷ்டர்களானுர்கள். அம்மாதிரியே, மைத்ரேயி, சுலப, ஸ்யாங்கி, (ஸ்யாங் டெல்லி,) தபஸ்வினி. சூடாலாமுதலான ஸ்திரீகளும் மஹாயோகிகளாக இருந்தார்கள். இவர்களெல்லாம் தபோசக்தியினல் பரப்பிரம்மஸ்வரூபமானுர்கள். கருணைநிதியான பரமசிவன் சமஸ்தவேதாந்த சாரங்களை ஸ்ரீபார்வதி தேவிக்கு உபதேசித்தார். அவ்வாறே பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனும் லக்ஷ்மிதேவிக்கு போதித்தவாறு சாஸ்திரங்களில் தெரியவருகிறது. ருஷிசிரேஷ்டரான யாக்ஞவல்க்ய மஹாருஷி தன் மனைவி மைத்ரேய அம்மைக்கு வேதாந்தசார தத்வோபதேசமும், போதித்தவாறு பகவத ப்ருஹத்தாரண்ய கோபனிஷித்துகளில் பிரசித்தியாகியுள்ளது. ருஷிபுங்கவரான மதுங்க மஹாருஷி அனித்ய ஜாதியான ஸ்ரீசபரிக்கு பிரம்ம தத்வோபதேசம் செய்தவாறு ஸ்ரீமத்ராமயணத்தில் பிரசித்தியாகியுள்ளதல்லவா! மேலும், கார்கி என்ற ஸ்திரீயை வேதாத்யாயத்தில் மஹாவிதுஷி

என்று பண்டிதர்கள் எல்லாருமே சொன்னார்களே! கலியுகத்தில் ஸ்ரீஉபயபாரதி என்ற சுரேஸ்வராச்சாரியாருடைய தர்மபத்நீ, ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரியாருடன் பிரம்மவாதம் செய்யவில்லையா! அதைப்போலவே, ஜாலந்திரயோகீஸ்வரர், மைனாவதிக்கு யோகவித்யா உபதேசம் செய்தவாறு சரித்திரங்களில் தெரியவருகிறது. ஞானவாசிஷ்டத்தில் சூடால என்ற ஸ்திரீ யோகானுஷ்டானத்தில் ஞானத்தைப் பெற்று, தன் கணவரான சிகித்வஜ மஹாராஜாவுக்கு குருவானதாக சாஸ்திரங்களில் தெரியவருகிறது. அதைப்போலவே சிவபக்தியில் தன்யர்களான ஸ்ரீகாரைக்காலம்மையார், ஸ்ரீநந்த, கண்ணப்ப நாயனார் முதலானவர்களின் பக்தி பிரபாவத்தை என்னவென்று சொல்லமுடியும், அவ்வாறே, ஸ்ரீவைஷ்ணவ பக்திமான்களான நம்மாள்வார், திருப்பாணியாழ்வார், எக்குலத்தில் ஜனித்தார்கள்? மேலும், ஆண்டாள் ஸ்திரீஜன்மமல்லவா? ஆதலால்,

"இறப்ப இழிவுடைத்தே னேனும்
பிறப்பினை யாரு முனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்" —நாலடியார்

மனிதர் பிறப்பை யோசிக்குமிடத்து அது மிகவும் கெட்டதாகத் தோன்றினாலும், அப்பிறப்பினுள்ளே நற்குணம் பொருந்திய நல்லோர்களுடனே எப்பொழுதும் கூடிப்பிரியாமல் சிநேகமாயிருக்கப்பெறின் அவர்களுடைய அப்பிறப்பை எவரும் வெறுக்க மாட்டார்கள் உயர்ந்ததாகவே கருதுவார்கள்.

"ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஓரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து" —நாலடியார்

ஒரு ஊருலிருந்து வெளியாகும், சலதாரை நீரானது குளம், நதி முதலியவற்றின் நல்ல நீரைச் சேர்ந்தால் பெயரும் மாரி, உயர்ந்த பெயர்பெற்று பரிசுத்தமான தீர்த்தமாகிவிடும் அதுபோல உயர்குல பெருமை இல்லாதவர்களும், நற்குணங்களையுடைய உத்தமர்களை அடைந்து மலைபோல பெருமையை யுடையவராய் நிலைபெற்றிருப்பார்கள்.

மழையற்ற காலங்களிலும் மலையானது நீர் சுரக்கும். அசையாமல் நிலைபெற்று உயர்ந்த தோற்றமுடையதாயிருக்கும். அதுபோலவே நல்லவர்களுடன் கூடியவர் யாவராலும் உயர்ந்தவராக மதிக்கப்பட்டும். சிறந்தமனமுள்ளவராயும், எதற்கும் மனோநிலை கலங்கா திடசித்தம் படைத்த புண்ணியவனுகப் புகழப்படுவார்.

மேலும், மானிடராய் பிறந்தோர் பெரும்பான்மையும், நிலையற்ற உலக போகங்களையே மிகவும் விரும்பி முக்தி மார்கங்களை அறியாமல் நித்திய இன்பத்தை யிழந்தொழிவாராவர். ஆகையால், அப்படிப்பட்ட மனிதரின் பிறப்பு இழிந்ததாகும். எனினும், அத்தகைய மனிதர் நற்குணங்களையுடைய நல்லவர்களுடன் கூடினுல், அந்நல்லார்கள் அவருக்கு பிறப்பு நீங்கி நித்திய இன்பமாகிய நற்பயனை யடைவதற்குரிய முக்தி மார்கங்களை உபதேசிப்பார்கள்.

எவரொருவர் மிக்க பாதகத்தை செய்தும், சுசி, ஆசாரமில்லாமல் இருப்பாரோ, அவரே முதன்மையாக தியான, ஜப பஜனைகளைச் செய்யவேண்டும். ஏனெனில், வியாதி பிடித்தவருக்கல்லவா ஒளஷத சேவை செய்யவேண்டும் ஒளஷத சேவை செய்யாமல் வியாதி எவ்வாறு சாந்தியாகும்? அக்ஞானத்தோடு யிருப்பவர் ஞானத்தையடைய கிரந்தங்களை வாசித்தும் பக்திமான்களுடன் கூடியும், பிரம்ம நிஷ்டையையும் அனுஷ்

டித்தால் பக்திமான்களாவார்கள். மேலும், ஔஷத சேவை செய்பவர்கள் பத்யமாய் இருத்தல் வேண்டும். இல்லையேல், எவ்வளவு சிறந்த ஔஷதமும் திரேக சுகத்தை அளிக்காது. அதுபோல், மோக்ஷத்திற்கு வைராக்கியம் பிரதானமாகும்.

> "நவைராக்யாத்பரோ லாபோ நபோதாத் பரமம் சுகம்
> நகுரோராபரஸ்த்ராதா நஸம்ஸாராத் பரோரிபு"
>
> —வைராக்யாஷ்டகம்

வைராக்கியத்தைவிட (பிரதிக்ஞை) மிக்கலாபமுமில்லை, ஞானத்தைவிட மிக்க சுகமுமில்லை. குருவைவிட ரக்ஷிப்பவருமில்லை, சம்சாரத்தைவிட மிக்க சத்ருவுமில்லை.

> "அத்யந்த வைராக்ய வதஸ்ஸமாதி
> ஸமாஹித ஸ்யைவத்ரு டப்ரபோத:
> ப்ரபுத்த தத்வஸ்யஹி பந்தமுக்தி
> ர்முக்தாத்மனோ நித்ய சுகானுபூதி:"

மிக்க வைராக்கியம் உண்டானவருக்கே சமாதி ஏற்படும். அப்படிப்பட்ட சமாதி ஏற்பட்டவருக்கே திடமான ஞானம் உண்டாகும் உண்மையான ஞானம் உண்டானவருக்கே சம்சாரபந்தத்திலிருந்து விடுபட்டு மோக்ஷம் உண்டாகும். அப்படிப்பட்ட முக்தாத்மாவுக்கே நித்ய சுகானுபவமுண்டாகும். ஆதலால், வைராக்கியம் இவைகளுக்கு மூலமாக ஏற்படுகின்றது. எல்லா ஜனங்களும் இவ்வாராக வைராக்கியத்தை அனுஷ்டிக்க வேண்டும். அந்திரசுத்தி தவராமல் இருக்கவேண்டும்.

ஆத்மா பரிசுத்தத்திற்கும், சுபாவ அனுபவத்திற்கும், வைராக்யம் அவசியமாகும். மனோபலஹீன மகன்று வலிமையுண்டாகும். கண்டபடி மனம்கெட்டு அலைந்து திரியாதபடி தடுத்துப் பாதுகாக்கக் கூடியது வைராக்

கியமாகும். பாபகரமான விஷயங்களைக் குறித்தும், சந்தேகமான விஷயங்களைக்குறித்தும் எவரும் வைராக்கியம் செய்துக்கொள்ளக் கூடாது, உலகமுழுதும் போற்றும் புண்ய, தர்ம, தத்துவங்களைக் குறித்துவைராக்கியம் செய்துகொள்ள வேண்டும். இவ்வாரான வைராக்யம் செய்துக்கொண்ட பின்பு ஏதாவது அசௌகர்யங்கள் ஏற்படினும் தளரா உறுதியுடன் கூடி உயிரையே துரக்கநேர்ந்தாலும், தங்கள் விரதத்தில் தளராமனம் கொண்ட மனிதர் என்றேனும் ஒருநாள் ஈசுவரனை தரிசிக்கலாம்.

"நமோஹம்சர்வபூதேஷு, நமோத்வேஷ்யோ ஸ்திரப்பிரய:,
ஏபஜந்திதுமாம் பக்த்யாமயிதே தேஷுசாப்யஹம்"

பகவான் சமஸ்த்த பிராணங்களிலும் சமானமாய் இருக்கிருர். ஆகையால் அவருக்கு ஒருவர் பிரியமாயும், மற்ெருருவர் பிரியமில்லாமையுமில்லை. எந்த குலத்தில் ஜனித்தவர்களாஞலும் அவரை பக்தியுடன் பூஜிப்பார்களேயாஞல் அப்படிப்பட்ட பக்திமான்கள் யாவராஞலும் சரி அவர்கள் பகவானிடமிருப்பார்கள். பகவானும் அப்படிப்பட்ட பக்திமான்களுடைய ஹருதயத்தில் இருப்பார்.

நாம் சமஸ்த பிராணங்களிடமும் நம்மைப்போல் சமானமாக பேதமையின்றி பார்ப்போமாகில் நம்மை கருணாநிதியான ஜெகதீஸ்வரர் தயையுடன் தனக்கு சமானமாய் பார்ப்பார். நம் ஹ்ருதயம் கபடமின்றியிருந்தால் நமக்கு மோக்ஷத்திற்கு சாதகமாகும். நம் ஹ்ருதயம் கபடத்துடனிருந்தால் நமக்கு மோக்ஷத்திற்கு பாதகமும். தடையுமேற்படும் ஆதலால்,

அன்புள்ள சகோதர, சகோதரிகளே.

இத்தியானமே சாஸ்வதானந்த மோக்ஷமாகுமென்று ஸ்ரீவசிஷ்டர், வேதவியாசர், நாரதாதி மஹருஷிகளுடைய

முக்கிய அபிப்ராயமாக மேற்பட்டிருக்கிறது. தீபத்திற்கு எண்ணெய் முதலியவைகள் எவ்வளவு முக்கியமோ அதைப்போலவே, ஆத்ம தியானதீபத்திற்கு பக்தியே எண்ணெயைப்போல முக்கிய மேற்படுகின்றது. இக் காரணத்தினுல் கருணுநிதியான ஸ்ரீகிருஷ்ண பகவான் பகவத் கீதையில்,

" பக்த்யாமாமபி ஜாநாதி "

என்று சொன்னுர்.

இதற்கு காரணமென்னவென்ருல் பக்தி மார்கத்தில் எவ்வித அபாயமுமில்லை. ஆதலால் ஸ்திரி, பால்யர்களும், பிராம்மணுதி எல்லாகுலத்தினரும் இதற்கு அருகதையான வர்களே. மேலும், எவருக்கு அக்ஞானம் அதிகமாக இருக் கிறதோ, அவரல்லவோ தியானுனுஷ்டானங்களை முதன் மையாக அனுஷ்டிக்க வேண்டும். ஏனெனில், வாத, பித்த, ஸ்லேஷ் மதோஷங்களால் சரீரத்திற்கு உண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்க ஔஷதங்கள் ஏற்பட்டது. அவ் வாறே, ஆத்மாவிற்கு (ஜீவம்) பாதிக்கப்பட்ட மல, அக் ஞானம், விக்ஷேபம் அல்லது சத்வ, ரஜ, தமோகுணங்க ளான அக்ஞானரரோக நிவர்த்திக்கு கர்மம், உபாசனை, ஞானம் முதலிய மூன்று மார்கங்களும் வேதத்தில் பிரசித் தியாகியுள்ளது. பசியுடையோர்க்கு ஆகாரம்தேவை. வியா தியுடையவருக்கு ஔஷதம்தேவை. ஆகையால் ஒருஆத்மா எக்குலத்தில் பிறந்திருந்தாலும், ஸ்திரி, புருஷராக எந்த ஜன்மமெடுப்பினும், எப்பதவியிற்சேரினும், சமஸ்த பிரா ணன்களையும் பேதமையின்றி சமானமாகக்கருதி இவ்வுலக வாழ்க்கை, ஜனனமரண ரூபமுள்ள மஹாத்துக்கசரமான சம்சாரசாகர மென்றுணர்ந்து, அவ்வாழ்க்கையை இன்ப மென்று நினையாமல், உயிர்க்கு பாதுகாப்பாகிய பக்திவழிக ளில் என்றும் அழிவற்றஞான, வைராக்கியத்தைச்

செலுத்தி புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். அதுவே அவர் தளர்ந்தகாலத்தில் அதாவது இறந்து இவ்வுலகைவிட்டு மறுஉலகம் செல்லுங்காலத்தில் உதவும் க்ஷேம நிதியாகும்.

சமுத்திரத்தின் ஓசை எப்பொழுதும் அடங்காது. அங்ஙனமிருக்க ஒருவர் அதில் நீராடச்சென்று ஓசையடங்கிய பின் மூழ்கலாமென்று காத்திருந்தால் எப்பொழுதும் நீராடமுடியாது. அதுபோல சம்சாரகாரியங்கள் எப்பொழுதும் முடிவுபெறுது, அவ்வாறிருக்க ஒருவர் அக்காரியங்களைக் குறைவின்றி முடித்துக்கொண்டு பக்திவழிகளில் ஈடுபடலாமென்று நினைத்திருப்பாராயின் எக்காலத்திலும் அது முடிவுபெறுது. ஆகையால் முடிவான முக்திப்பேறின் பத்தையடைவதற்கு இவ்வுலகில் மனிததிரேக மெடுத்தோம். பக்திவழிகளில் ஈடுபட்டு ஞான, வைராக்கியத்தைச் செலுத்தி சாஸ்வதமான பகவத்சரணுகதியை அடையும்படியாக பிரார்த்திப்போமாக.

சுபம்.

" நமஸ்தேபுண்ரீகாக்ஷ பக்தாநாமபயங்கரா
ஸ்ரீராமாநமஸ்தேஸ்து த்ராஹிமாம் சரணுங்கதம் "

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 113241
EGMORE MADRAS

உ

ஸ்ரீராமஜெயம்.

விளம்பரம்.

ல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் ாஸ்திரத்தில் எனது முன்னோர்கள் பிரசித்தி அடைந்த பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அடியில் குறிப் கும என்னால் ஜாதகம், கோசாரம், தசாபுக்தி, வருஷபலன் வைகள் கணித்து எழுதிக் கொடுக்கப்படும்.

ஜாதகம் ஜனனகால லக்ன ஸ்புடம் செய்து குறிப்பு எழுத ரூ. 3—0—0

2. ஒரு வருஷத்தின் மாதவாரி பலன் எழுத ரூ. 6—0—0
(லக்ன ஸ்புடம் செய்த குறிப்பைக்கொண்டு)
3. எதிர்கால சம்மந்தமாக 5-கேள்விகளுக்கு பதில் எழுத
(கடிதம் எழுதும் நேரம் தேவை) ரூ. 2—0—0
4. ஒரு தசையின் 9-புக்திகளின் பொதுவான பலன் எழுத
(லக்ன ஸ்புடம்செய்த குறிப்பைக்கொண்டு) ரூ. 9—0—0
5. விவாஹ பொருத்தம் பார்த்து பதில் எழுத ரூ. 2—0—0
6. வியாபார மார்க்கெட் ஸ்திதிகளின் ஏற்றதாழ்வு முக்கிய அபிப்பிராயம் எழுத ரூ. 15—0—0

N.B.—பெயர், ஜனனகால விவரம், அல்லது சுமார் வயது, தொழில் முதலியவைகள் எழுதவும். (தபால்செலவுகள் பிரத்தியேகம்)

தமிழில் எமது சொந்த பிரசுரங்கள்

கீழ்க்கண்ட புஸ்தகங்களும் இன்னும் அநேக தமிழ், தெலுங்கு முதலிய புஸ்தகங்களும் விரிவாக எழுதப்பட்டு, எம்மிடம் விற் பனைக்கு தயாராய் இருக்கின்றன. வேண்டியவர்கள் நேரிலோ V.P.P. மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

1. பக்தி ரூ. 0— 6—0
2. விரதகல்பம், முதல்பாகம் விநாயகர், ஸ்ரீ லக்ஷ்மி சரஸ்வதி பூஜா மந்திரங்களுடன், கதை வசன சுருக்கத்துடன் ரூ. 0—10—0

(தபால் செலவுகள் பிரத்தியேகம்)

வடச்சேரி,
ரியம்பாடி P. O.,
...th India)

இப்படிக்கு,
ஸ்ரீ குரு பாஸ்கராச்சாரியா,
K. S. ராமமூர்த்தி சர்மா,
ஜோதிஷர்.